புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • செப்டம்பர், 04 2025 • புரட்சி 25 • முழக்கம் 36 • விலை ரூ.6.00

## பெரியார் பல்கலைக்கழக பேராசிரியர் பணிநீக்கம் கழகம் வரவேற்பு

சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தில் நிலவி வந்த ஜாதிய மேலாதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த தமிழ்நாடு அரசுக்கும் துணைவேந்தர் நிர்வாகக் குழுவிற்கும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ள அறிக்கை:

"சேலம் பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் பெரியசாமி போலிச் சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்ததாகக் குற்றச்சாட்டு மர்மமான முறையில் நீடித்து வருகிறது.பதிப்புத் துறையின் இயக்குநராக இருந்தபோது பல்கலைக்கழக மானியக் குழு ஒதுக்கிய நிதியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரித்த சேலம் இலஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணை முடிவுக்கு வரவில்லை.

இந்நிலையில் இவர் பட்டியலின ஆராய்ச்சி மாணவர்களை ஜாதியைச் சொல்லி திட்டுவதாக புகார்கள் அளித்தனர். 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் வெளியான பேராசிரியரின் பட்டியலின ஜாதி மாணவர்களுக்கு எதிரான பாகுபாடு குறித்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு தேசிய பட்டியலின ஆணைய உத்தரவின்படி மாவட்ட நிர்வாகத்தின் விசாரணை நடைபெற்று வருகிறது.

மேலும் கல்வியியல் துறை பட்டியலினப் பேராசிரியர் ஒருவரை "பட்டுப் புடவை கட்டி வந்து மினுக்குவதால் ஒன்றும் ஆகாது, நான் நினைத்தால் கல்வியியல் துறையை இழுத்து மூடிவிடுவேன்" என்று மிரட்டிய குற்றச்சாட்டும் நிலுவையில் உள்ளது.கல்வியியல் துறை உதவிப் பேராசிரியர் ஒருவரை தரக் குறைவாக இழிவாக திட்டி உள்ளார்.

தொகுப்பூதியப் பணியாளரை ஒருமையில் தரக் குறைவாக பேசி உள்ளார். அப்போதைய துணைவேந்தர் ஜெகன்னாதனிடம் புகார் அளித்தும் அதை அவர் கண்டு கொள்ளவே இல்லை.

முன்னாள் ஆசிரியர் சங்கத் தலைவரை "சில்லறைப் பயல் விளங்க மாட்டான் அவன்" என்று பலர் முன்னிலையில் தரக் குறைவாக பேசியும் உள்ளார். தமிழ்த்துறையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்ட 19 க்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் இவர் துறைத் தலைவராக இருந்த காலத்தில் ஆய்வை முடிக்காமல் இடை நின்று விட்டனர். இப்படி இவர் மீதான குற்றச்சாட்டுகள் நிறைய உள்ளன.

குற்றச்சாட்டிற்கு முகாந்தரம் உள்ளதாக விசாரணைக் குழு அறிக்கை அளித்தது.

இந்நிலையில் பாஜக ஆசிரியர் அணியின் துணைத்தலைவரும், ஜாதிய ஒடுக்குமுறைகளை மேற்கொண்டவருமான பெரியசாமி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு அரசுக்கும் துணை வேந்தர் நிர்வாகக் குழுவிற்கும் திராவிடர் விடுதலைக் கழகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.


பெரியசாமி ஜாதிகுறித்து பேசிய குற்றச்சாட்டுகள் குறித்து விரிவாக விசாரணை நடத்த நீதிபதி, கல்வியாளர்களைக் கொண்ட உயர் மட்ட விசாரணைக்குழுவை அமைக்க வேண்டும்.கல்வித் தகுதி சான்றிதழ் மோசடி போன்றவற்றை முறையாக விசாரணை செய்து அவரைப் பணி நீக்கம் செய்வது ஒன்றுதான் சரியான முடிவாக அமையும்.

**-"கொளத்தூர் மணி," தலைவர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
*30.08.25*

## பெரியார் மீதான அவதூறுகளை மறுக்கும் ஆங்கில நூல் வெளியீடு

### சிந்தனையாளர்களால் அரங்கு நிரம்பி வழிந்தது

People's literature பதிப்பகம் வெளியிட்டுள்ள "Periyar: Caste, Nation and Socialism" நூலின் அறிமுக விழா, (24.8.25), சென்னை தேனாம்பேட்டை அன்பகத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.




கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று நடத்தினார். பெரியார் மீது எழும் கேள்விகள் அல்லது குற்றச்சாட்டுகள், அல்லது மனதறிந்து பேசுகிற பொய்கள் எல்லாவற்றையும் விளக்கும் நோக்கத்தோடு இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பெரியார், அம்பேத்கரின் பார்வைகள், புத்தம் குறித்த பெரியார், அம்பேத்கர் கருத்துக்கள் ஆகியவற்றை முதன்மை தலைப்பாக பதிவு செய்துள்ளார். ரங்கூன் மாநாட்டில் பெரியார், அம்பேத்கர் கலந்து கொண்ட செய்திகளையும், வன்முறைக்கு எதிராக பெரியார் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார். நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

கோவி. கனக விநாயகம் (துணைப் பேராசிரியர், எஸ்.ஆர்.எம் சட்டக் கல்லூரி , சென்னை) பேசுகையில், எளிய மொழிநடையில், கேள்வி பதிலாக தொகுக்கப்பட்டுள்ளது இந்நூல். 21ம் நூற்றாண்டில் திராவிடர் இயக்கத்துக்கு கிடைத்த ஆவணம் இந்த நூல் என்று வாழ்த்துரை வழங்கினார்.

நூலின் உருவாக்கம் குறித்து பல சுவையான தகவல்களை North Indian Dravidian என்று அழைக்கப்படும் ஜாதி ஒழிப்புப் போராளி வித்யா பூஷன் ராவத் (புதுடெல்லி) ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

ஏ.எஸ் பன்னீர் செல்வம் (தலைமை இயக்குனர் இதழியல் நிறுவனம்) ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ள சிக்கல் குறித்தும் மொழிபெயர்ப்பு துறையில் இன்னும் மாற்றங்கள் வரவேண்டும் என்றும் கூறினார்.

பெரியார் ஏன் ஆங்கிலத்தில் எழுதவில்லை என்ற குற்றச்சாட்டில் நியாயம் இல்லை என்றார். "குடிஅரசு, ரிவோல்ட்" வெளியிட்ட செய்திகளே அன்றைய செய்தித் தாள்களில் பெரிதும் வரவில்லை. பெரியார் காலம் தொடங்கி கலைஞர் வரை இதழ்களை அவர்களே அச்சடித்து அவர்களே பரப்பினார்கள். ஆங்கில நூல்களின் தேவை குறித்தும் அதனை சரியான மொழியாக்கத்தில் கொண்டு வரவேண்டும் என்றும் சிறப்புரையாற்றினார்.

முனைவர் கார்த்திக் ராம் மனோகர் (இணை பேராசிரியர் இந்திய தேசிய பல்கலைக்கழக சட்டப் பள்ளி- பெங்களூரு) பேசுகையில்: இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்ல பல இடங்களில் பேசு பெருளாக மாறி உள்ளார் பெரியார். ஆண்டுதோறும் நடத்தப்படும் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பெரியார் குறித்தான ஆய்வறிக்கை வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்கம் பற்றிய கருத்தரங்கம் நடைபெற உள்ளது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் திராவிட ஆய்வுகள் பற்றி பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
1960-களில் உலகம் முழுவதும் மாணவர் புரட்சி பல நாடுகளில் நடந்தது. பிரான்சு, ஸ்பெயின், இங்கிலாந்து, அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா பல இடங்களில் நடந்தது. அவை அனைத்தும் தோல்வியைத் தழுவியது. தமிழ்நாட்டில் நடந்த திராவிடர் இயக்க மாணவர்கள் போராட்டம்தான் வெற்றி கண்டது. பெரியார் தமிழ்நாட்டுத் தலைவர் மட்டும் அல்ல! உலக தலைவர் என்றும் பல்வேறு நாடுகளில் பெரியார் பரவி கொண்டிருக்கிறார் என்றும் தனது மதிப்புரையில் பேசினார்.

இறுதியாக, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள திராவிடப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் கே.எஸ்.சலம், நிகழ்காலத்தில் திராவிடம் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றியும், திராவிடத்தை தமிழ்நாட்டுக்குள் சுருக்காமல், அதனை இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வகுடிகள் (Native Indians) அனைவருக்குமான பொது அடையாளமாக நிறுவுவதின் அவசியம் குறித்தும் சிறப்புரையாற்றினார்.

தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்) நன்றியுரை ஆற்றினார். பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் சிந்தனையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றனர்.

## பெரியாரின் இங்கிலாந்து பயணத்தில் நடந்தது என்ன?

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பெரியாரின் படத்தை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். பெரியார் உலகமயமாகி வருகிறார் என்று பெருமிதத்துடன் முதலமைச்சர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பெரியார் 16. 6 .1932 தேதியிலிருந்து 6.7.1932 வரை இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்தார். பயணத்திற்கு உடன் இருந்து உதவியவர் கம்யூனிஸ்ட் தலைவர் சக்லத்வாலா. இவருடன் தொடர்பு கொள்ள அறிமுக கடிதம் கொடுத்தவர்; பெர்லின் நகரில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் புரட்சியாளர் டெட்.

இங்கிலாந்து பயண விவரங்களை பெரியார் தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். அதில் 28 .6.1932 தேதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியை பதிவு செய்துள்ளார். அமெரிக்காவில் ஸ்கார்பியோவில் 9 கருப்பின இளைஞர்கள் மீது "ரேப்" குற்றம் சாட்டி தூக்குத் தண்டனை விதித்தது அமெரிக்க அரசு.

உலகம் முழுதும் தூக்குத் தண்டனைக்கு எதிராக கண்டனங்கள் வெடித்தன. இங்கிலாந்தில் நடந்த இந்த கண்டனக் கூட்டத்தில் பெரியாரும் கலந்து கொண்டார். தூக்குத் தண்டனைக்கு உள்ளான இரண்டு மகன்களின் தாய் "ரைட்டு" என்பவர் முன்னிலையில் இந்த கூட்டம் நடந்தது. வழக்கு நடத்த நிதி திரட்டப்பட்டது, 13 பவுன் நிதி சேர்ந்தது. ஜெர்மன் வெள்ளி சங்கிலி ஒன்று ஏலம் விடப்பட்டது. பெரியார் அதை அரை பவுனுக்கு ஏலம் எடுத்தார் என்று நாட்குறிப்பில் எழுதியுள்ளார். கம்யூனிஸ்ட் தலைவருடன் தொழிற்சங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பெரியாரை காவல்துறை தொடர்ந்து கண்காணித்து இரண்டு முறை விசாரணை நடத்தியது.

தொடர்ந்து இங்கிலாந்தில் இருக்க முடியாத நிலையில் சக்கலத் வாலா ஆலோசனையை ஏற்று பயணத்தை தொடர முடியாமல் பெரியார் இங்கிலாந்தை விட்டு வெளியேறினார். அதே இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பெரியாரின் படத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். இது வரலாற்றுச் சிறப்பு!

**விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**

## தலையங்கம்

# உலகமயமாகிறார் பெரியார்

**நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்குச் சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம், உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை செய்து, ஒப்பக்கூடியவைகளை ஒப்பி, தள்ளக்கூடியவைகளைத் தள்ளிவிடுங்கள் என்கின்ற நிபந்தனையின் பேரிலேதான் எதையும் தெரிவிக்கின்றேன்.**

**–பெரியார்**

வரலாற்றுப் பெருமை கொண்ட இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவும் பெரியார் படத்திறப்பும் நடந்து முடிந்துள்ளது. இந்நிகழ்வுகளில் பங்கேற்கும் வரலாற்றுப் பெருமை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

உலகில் உள்ள மற்ற சமுதாயத்தைப் போல் மானமும் அறிவும் கொண்ட சமுதாயமாக மாற்றி அமைப்பதே தனது ஒரே குறிக்கோள் என்றார் பெரியார். அவரது சமுதாயப் பார்வை உலக சமுதாயத்தின் வளர்ச்சி பாதையை நோக்கி இருந்தது. ஐரோப்பிய நாடுகளிலும் சோவியத் ரஷ்யாவிலும் சுற்றுப்பயணம் செய்து மக்களை நேரில் சந்தித்தார் பெரியார், பார்ப்பனிய வர்ணாசிரம ஒடுக்குமுறை அந்த நாடுகளில் இல்லை. குறிப்பாக சோவியத் நாடு அவரை மிகவும் ஈர்த்தது. சோவியத் குடிமகனாகும் வாய்ப்பு இருந்தால் அதற்கும் தயாராக இருந்ததாகவே பெரியார் கூறியிருக்கிறார்.

பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் அதன் கொள்கைகளான கடவுள், மதம், பெண்ணடிமை, சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டி சமூக மாற்றத்தை நோக்கி நகர்த்தியது. இது பெரியார் மேற்கொண்ட தனித்துவமான நடைமுறை. ஆய்வாளர்கள் இதைப் பற்றி இப்போது விவாதித்து வருகிறார்கள். பெரியாரின் தேசியம், மத மறுப்பு மற்றும் பெண்விடுதலை சிந்தனைகள் உலகு தழுவிய பார்வையாக உயர்ந்து நிற்கிறது.

நாட்டின் எல்லைகளுக்காகவும் கற்பிக்கப்பட்ட மதங்களுக்காகவும் நாடுகள் இப்போது போராடிக் கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. பாலஸ்தீனர்களை இஸ்ரேல் யூதர்கள் இனப்படுகொலை செய்கிறார்கள், ரஷ்யா உக்ரைன் மீது தொடர்ந்த போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

உலகமயமாக்கல் என்ற கொள்கை வந்த பிறகு தேசங்களில் தன்னாட்சி கட்டமைப்புகள் சிதைந்து வருகின்றன. வணிகத்துக்கும் அணு ஆயுதங்கள் தடைக்கும், சுற்றுச்சூழலைக் காப்பாற்றுவதற்கும் நாடுகள் தங்களுக்குள் உடன்படிக்கைகளை உருவாக்கிக் கொண்டு, ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கும் கட்டாய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளன. சர்வதேச வலைப்பின்னலில் இருந்து எந்த ஒரு நாடும் துண்டித்துக் கொள்ள முடியாது. அதனால் தேசம், தேசபக்தி என்ற கற்பிதங்கள் கேள்விக்குறியாகி வருகின்றன.

திருப்பூரின் பொருளாதரத்தை அமெரிக்கா சீர்குலைக்க முடியும் என்றால் தேசியத்தின் ஒருமைப்பாடு சமரசத்திற்கு உள்ளாகிவிட்டது என்பதையே இது வெளிப்படுத்துகிறது. வளர்ச்சி நோக்கிய மானுடப் பற்றைத் தவிர வேறு எந்த பற்றும் இல்லை என்றார் பெரியார்.

மக்களை சமத்துவப்படுத்தாத தேசியங்களை எல்லைகளுக்காகவே ஏற்க வேண்டும் என்பதை பெரியார் மறுத்தார். தேசபக்தி நாடகத்தில் ஒப்பனை போட அவர் தயாராக இல்லை. இதுகுறித்து மறைந்த திராவிட இயக்க ஆய்வாளர் எம்.எஸ்.எஸ் பாண்டியன் இவ்வாறு கூறுகிறார்.

> ***“பெரியார் தன்னுடைய தேசியத் தேடலைப் பழமையிலிருந்து விடுத்து எதிர்காலத்தில் நிலைகொள்ள வைத்தார். பகுத்தறிவு, அறிவியல், மனித விடுதலையில் நம்பிக்கை, போராட்டம் மூலம் முன்னேற்றம், வரலாறு என்பனவற்றின் அடிப்படையில் புதுயுகத்துக்கான புறநிலை விளக்கம் தந்து தாம் காணவிரும்பிய எதிர்காலம் நோக்கிப் பயணித்தார்.”***

தேசியத்தைப் போலவே பெரியார் மதத்தை எதிர்த்த கருத்துக்கள் இன்று உலகத்தின் தேவையாகியிருக்கிறது. உலகில் தற்போது பல நாடுகளில் மத மற்றும் இன மோதல்கள் வெடித்து உள்ளன,

ஆப்பிரிக்கா நைஜீரியா, மொசாம்பிக், மற்றும் காங்கோ போன்ற நாடுகளில் மத அடிப்படையிலான கடுமையான தாக்குதல்கள் குறிப்பாக கிருத்துவ மற்றும் இசுலாமிய இனக்குழுக்களுக்கு எதிராக நடந்துள்ளன. மொசாம்பிக் நாட்டில் 2024ல் ஐ.எஸ்.எம். என்ற அமைப்பு பல தேவாலயங்களை அழித்ததாக கூறியிருக்கிறது.

நாடுகள் போர்களை நடத்தும் போது சொந்த நாட்டு மக்களே அரசுகளை எதிர்த்து வீதிகளில் இறங்கி போராடுவதை பார்க்க முடிகிறது. அமெரிக்காவின் வரி விதிப்புகளை எதிர்த்து அமெரிக்கர்களும், இஸ்ரேல் இனப்படுகொலையை எதிர்த்து இஸ்ரேலியமக்களும் வீதியில் வந்து போராடுகிறார்கள். ஆட்சிகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டிய பெரியாரின் சுயமரியாதை இயக்க அணுகுமுறைகளாகவே இதை பார்க்க முடிகிறது.

அடுத்து பெரியார் பேசிய பெண் விடுதலை இன்று உலக அளவில் பேசு பொருளாக மாறியிருக்கிறது. திருமணங்களே வேண்டாம் என்பது பெரியாரின் கருத்து. பெண்கள் திருமண அமைப்புகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளுதல், சுதந்திரமான வாழ்க்கையை வாழுதல், மதக் குறியீடுகளை எதிர்த்தல் என்ற போக்கு உலகில் பரவிவருகிறது. திருமண அமைப்புகளிலிருந்து விடுவித்துக் கொள்ளும் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இணைந்து வாழ்தல் என்ற வாழ்க்கை முறையை ஏற்பவர்களும், குழந்தைகள் வேண்டாம் என்ற இயக்கங்களும் உலகம் முழுதும் அதிகரித்து வருகின்றன.இவையெல்லாம் பெரியார் பேசிய பெண்விடுதலை கருத்துக்கள். பெரியார் பேசிய பெண் விடுதலை அவர்களின் சுயமரியாதையோடு இணைந்து சமூகத்தில் மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. பெரியாருடைய கருத்துகள் உலகமயமாகி வருகின்றன என்பதற்கு இவையெல்லாம் சான்றுகள் எழுந்து நிற்கின்றன.

# அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் கோவை கெம்பனூர் கிராமத்தில் தொடரும் பேருந்து தீண்டாமை

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகே கெம்பனூர் என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமம் ஓரளவு பெரிய கிராமம். இந்த கிராமத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நிகராக தாழ்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கையில் உள்ளனர். பிற்படுத்தப்பட்டவர்கள் வாழும் பகுதியின் மத்தியில் பள்ளிக்கூடம் உள்ள இடத்தில் ஒரு பேருந்து நிறுத்தம், அடுத்து 500 மீட்டர் தொலைவில் இந்த கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் மக்கள் வாழும் பகுதி அண்ணா நகர் என்று அழைக்கப்படும் அந்த இடத்தில் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது. கெம்பனூருக்கு 21, 21b இரண்டு பேருந்துகள்தான். ஆனால் தற்போது 64D,1C, பேருந்துகள் செல்கின்றன, இடைப்பட்ட காலத்தில் 94 பேருந்து சென்றது. கொரானோ காலத்துக்குப் பிறகு செல்வது இல்லை. பொதுவாக மேலோட்டமாக பார்க்கும் போது அண்ணா நகருக்கு 21B காலை 8:30க்கு ஒரு முறையும் 1C ஒரு முறையும் 64D மூன்று முறையும் தானே செல்கிறது பிறகு என்ன பிரச்சனை என்று நினைக்கத் தோன்றும்.

ஆனால் உண்மை நிலை 21 காலை தொடங்கி இரவு வரை 7 முறையும்,21B நான்கு முறையில் மூன்று முறை கெம்பனூரோடு திரும்பிவிடும். உள்ளூர் மக்கள் இதற்காக அவ்வப்போது குரல் கொடுக்கும் போது சமாதானப்படுத்தும் விதமாக மாற்றுப் பேருந்துகளை அனுப்பி உண்மை பிரச்சினையை மூடிமறைத்துவிடுவர் இதற்கு அங்குள்ள திமுக, அதிமுக, பாஜக மற்றும் சமூக ஆர்வலர்கள் என அனைவரும் ஜாதிய தீண்டாமையைக் கடைப்பிடிப்பதில் ஒரே நேர்கோட்டில் உறுதியாக உள்ளனர்.

பிரச்சனை நடக்கும் போதெல்லாம் அந்தப் பகுதிக்கு சென்று விசாரிக்கும் ஆர்டிஓ மற்றும் அரசு அதிகாரிகள் உண்மையான ஜாதிய தீண்டாமை பிரச்சனைகள் தெரிந்தும் அதற்கு என்ன தீர்வு என்பது தெரிந்தும் அதற்கு அக்கறை காட்டாமல் இருப்பதுதான் மிக பெரிய வேதனை. திராவிடர் விடுதலைக் கழகம் "வைக்கம் போர் முடியவில்லை" என்ற தலைப்பில் ஜாதிய தீண்டாமை கொடுமைகளை கள ஆய்வு செய்யச் சென்றபோது இந்த ஊரில் அரசு பேருந்து பின்பற்றும் ஜாதிய தீண்டாமை கொடுமையை கெம்பனூரில் உள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களிடம் பேசி அதன் உண்மை நிலையை பட்டியலில் இணைத்துக் கொண்டு கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனுவாக மாநகரத் தலைவர் நிர்மல் குமார் பெயரில் 25/11/2024 அன்று கொடுக்கப்பட்டது. இதே “வைக்கம்போர் முடியவில்லை” ஜாதி தீண்டாமை கொடுமை பட்டியலை தலைமைக்கு அனுப்பி வைத்ததன் மூலம் தலைமை மற்றும் சென்னை தோழர்கள் அன்றைய தமிழ்நாடு மாநில பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆணையத்தின் துணைத் தலைவர் புனித பாண்டியன் அவர்களிடமும் கொடுத்தனர். ஆனால் தீர்வு மட்டும் இன்றுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கோவை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவின் செய்தியை இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் 26/11/2024 ல் விரிவாக வெளியிட்டது. மீண்டும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் தற்போது அந்த ஊரில் அரசு பேருந்தில் இன்றும் ஜாதிய தீண்டாமை பிரச்சினை இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்து மீண்டும் 22/8/2025 தேதியில் செய்தியாக வெளியிட்டது. ஏற்கனவே திராவிடர் விடுதலைக் கழகம் இந்த புகார் மனு கொடுத்ததையும் கள ஆய்வு செய்ததையும் செய்தியில் இணைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 23/8/2025 தேதியில் கோவை போக்குவரத்து பொது மேலாளரிடம் மாநகர செயலாளர் வெங்கட் அவர்கள் கெம்பனூர் அரசு பேருந்து பின்பற்றும் ஜாதிய கொடுமையை குறிப்பிட்டு புகார் கடிதம் கொடுத்தார். ஆதிதிராவிடர் நல ஆணையம் இந்த பிரச்சினை குறித்து கேள்வி கேட்டு 24/9/2025 குள் விளக்கம் அளிக்க கோரி கடிதம் அனுப்பியுள்ளனர். திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் அரசு பேருந்து பின்பற்றும் இந்த ஜாதித் தீண்டாமை கொடுமையை ஒழிப்பதில் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

**செய்தி- நிர்மல்குமார் திவிக**

# ஆணவப் படுகொலைகளை தடுக்க தனிச்சட்டம் இயற்றுக;

## கடலூரில் கழகம் ஆர்ப்பாட்டம்



“மனிதம் நமது அடையாளம் ஜாதி நமக்கு அவமானம்” என்ற தலைப்பில் ஜாதி ஆணவப் படுகொலை தொடர்ந்து செய்து வரும் ஜாதி வெறியர்களை கண்டித்தும் கடுமையான சிறப்பு சட்டம் இயற்றிட தமிழ்நாடு அரசையும், ஒன்றிய அரசையும் வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் பெரியார் சிவா தலைமையில் ஆகஸ்டு-16 அன்று கடலூர் மஞ்சகுப்பம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), தொடக்கவுரையாற்றினார். இள.புகழேந்தி (வழக்குரைஞர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க), திருமூர்த்தி (வழக்குரைஞர் சென்னை உயர்நீதி மன்றம்), லோகு.அய்யப்பன்(தலைவர் புதுச்சேரி திவிக), லூசியா (வழக்குரைஞர் ஆற்றல் மாநில ஒருங்கிணைப்பாளர்), தி.ச திருமார்யன் ( வழக்குரைஞர் விசிக மாநில அமைப்புச் செயலாளர்), எழிலேந்தி (மாவட்ட செயலாளர் தி.க), கார்ல் மார்க்ஸ் (வழக்குரைஞர் பாலா பேரவை), புதுவை பிரகாஷ் (தலைவர் தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கம்), ராஜா (ஒருங்கிணைப்பாளர் தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கம்), பாலு (மாநில தலைமை குழு உறுப்பினர் மக்கள் அதிகாரம்), பஷிர் அகமது( பிபோல்ட் இயக்கம்), சி.சு சாமிநாதன் (நிறுவனர் புதுச்சேரி மாணவர் கூட்டமைப்பு), சக்திவேல் (அமைப்பாளர் தாயுமானவர் தபெதிக), புதுச்சேரி தீனா( அமைப்பாளர் பெரியார் சிந்தனையாளர் இயக்கம்) ஆகியோர் கண்டனவுரையாற்றினார்கள்.

கனிமொழி, பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் புரட்சிகர பாடல்களைப் பாடினார்கள். கழகத் தோழர்கள் ப.அருண் (இளைஞரணி அமைப்பாளர்-சென்னை), கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), பழனிவேல் (பெரியார் சிந்தனையாளர் இயக்கம்), குணசேகரன், சீதர், சத்தியராஜ், திருஞானம், அறிவழகன் (அறிவியல் மன்றம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# புத்தர் பேசிய கடவுள் மறுப்பு

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை-14

**பேராசிரியர் அருணன் எழுதிய ‘கடவுளின் கதை’ மூன்று தொகுப்புகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கட்டுரையிலுருந்து சில செய்திகள்...**

உலக வரலாற்றிலேயே ஒரு மதத்தின் நிறுவனர் வலுவான கடவுள் எதிர்ப்பு வாதங்களை முதன்முதலாக முன்வைத்தார் என்றால் அவர் புத்தர்தான். கடவுள் எதிர்ப்போடு ஒரு புதிய சமூக ஒழுங்குமுறையை, சிந்தனை கட்டமைப்பை நடைமுறைப்படுத்த முயன்ற மகா புதுமையான முயற்சி புத்தருடையது. அவருக்குப் பிறகு இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட வேறு மத நிறுவனர் உலகில் தோன்றவும் இல்லை. இவரே முதலும் முடிவும் ஆனவர்.

புத்தரின் வாக்கு என்று பலராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற ஓர் உரையாடல் ‘தீவிக்க சுத்தம்’ எனும் நூலில் உள்ளது. அதில் ”பிரம்மா” எனத் தாங்கள் கூறுகிற ஒன்றை பார்ப்பனர்களில் எவராவது நேருக்கு நேர் கண்டதாகச் சொல்லியிருக்கிறார்களா எனும் கேள்வியை எழுப்பினார் புத்தர். அப்படிச் சொல்லவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார், ஆனால், "தாங்கள் எதை அறியவில்லையோ, எதைப் பார்க்கவில்லையோ அதனோடு ஒன்றுபடுகிற மார்க்கத்தை மட்டும் தங்களால் காட்ட முடியும் என்கிறார்களே, இது முட்டாள்தனம் இல்லையா?" என்று கடுமையாகக் கேட்டார். வேதவாதிகள் பிரம்மம்தான் கடவுள் என்றார்கள். புலன்களால் அறியப்படாத ஒன்றுடன் எப்படி ஒன்றுபட முடியும் என்று அறிவுபூர்வமான கேள்வியை எழுப்பி, ‘கடவுள்’ இருப்பை சந்தேகத்திற்கு உட்படுத்தினார் புத்தர்.

அநாதபண்டிகர் என்பாரோடு புத்தர் நடத்திய உரையாடலை புத்தரின் சீடர் அஸ்வகோஷர் பதிவு செய்திருக்கிறார். அது கடவுளின் இருப்பு பற்றியது. அது முடிவில் கடவுள் மறுப்பாக இருந்தது. இந்த உலகானது கடவுளால் படைக்கப்பட்டது. படைக்கப்படாமல் இது எப்படி தோன்றியிருக்க முடியும் என்கிற வாதம் ஆத்திகவாதிகளால் முன்வைக்கப்பட்டது. அதற்கான புத்தரின் பதில்: "இந்த உலகானது கடவுளால்படைக்கப்பட்டது என்றால் இங்கே இளமையோ மூப்போ, துக்கமோ அதற்கடுத்ததோ இருக்கக் கூடாது. பிறந்துவிட்டால் அப்படியே துன்பம் அல்லது பேரிடர் போன்றவையோ நடக்கக் கூடாது. நல்லது கெட்டது இருக்கக் கூடாது. அனைவரது சுத்தமான மற்றும் அசுத்தமான செயல்கள் எல்லாம் கடவுள் இடமிருந்தல்லவா வந்திருக்க வேண்டும்?" உலகைப் படைத்தது கடவுள் என்றால் இங்குள்ள குறைகளைப் படைத்ததும் அவரே என்றாகி விடுகிறது. குறைகளைப் பிறப்பிக்கிறவர் எப்படி முழுநிறைக் கடவுளாக இருக்க முடியும்? ஆகவே இந்த உலகு எவராலும் படைக்கப்பட்டது அல்ல என்றார்.

உலகைப் படைத்தது கடவுள் என்று பெரும்பாலோர் நினைக்கும்போது அது எப்படித் தவறாக இருக்கும் என்றொரு வாதத்தை முன் வைத்தார்கள். அதற்கு புத்தரின் பதில்: “கடவுள் உண்டு என்றால் அவர் பற்றிய சந்தேகம் ஒருவருக்குமே வரக்கூடாது அல்லவா? தனக்கொரு தந்தை உண்டு என்பது பற்றிய சந்தேகம் மகனுக்கு வருவதுண்டோ? அப்படியொரு நிச்சயமானதாக கடவுள் இல்லையே! தனக்கொரு துன்பம் வந்ததும் தனக்கொரு தந்தை உண்டா என்று எந்த மகனாவது கேள்வி எழுப்புகிறானா? ஆனால், பெருந்துன்பம் ஏற்பட்டதும் "கடவுளே நீ இருக்கிறாயா?" என்று கேள்வி எழுப்புகிறார்களே! கடவுளின் இருப்பு நிச்சயமானது என்றால் பேரழிவுகளுக்காகவும் அவரைப் போற்ற வேண்டுமல்லவா? செய்கிறார்களா? இதிலே வேத மதத்தில் ஏகப்பட்ட கடவுள்கள் இருந்தார்கள். படைப்பு வேலையை இத்தனை கடவுள்களும் சேர்ந்து செய்தன என்றால் அந்த வேலை அவ்வளவு சிக்கலானதா அல்லது கடவுள் தன்மை அவ்வளவு கையாலாகாத்தனமானதா? இது புத்தரின் கேள்வி.

"ஒரு நோக்கமுமின்றி உலகைப் படைத்தார் என்றால் அவர் பால் குடிக்கும் பச்சைக் குழந்தையாக இருக்க வேண்டும். வாழும் உயிர்களில் எல்லாம் துக்கமும் இன்பமும் உள்ளது. அவர்தான் இவற்றுக்குக் காரணம் என்றால் அவர் தன்னுள்ளேயே அன்பையும் வெறுப்பையும் கொண்டிருக்கிறார் என்பதாகும். அப்படிப்பட்டவரை சுய இருப்பாளர் என்று அழைக்க முடியாது". எப்படிச் சொன்னாலும் இடிக்கிறது. படைப்புக்கு நோக்கமேயில்லை என்பது கடவுளைக் குழந்தையாக்கியது. நோக்கம் உண்டு என்பது அவரை விருப்பு -வெறுப்புள்ள ஒரு சாதாரண மனிதனாக்கியது. எப்படிப் பார்த்தாலும் இந்த உலகு எவராலும் படைக்கப்பட்டதல்ல என்றார் புத்தர்.

## புத்தமும் அவர் தம்மமும்

**புத்தரின் கடவுள் மறுப்பு கருத்துக்களை ‘புத்தமும் அவர் தம்மமும்’ என்ற நூலில் விரிவாக விளக்குகிறார் அம்பேத்கர். அம்பேத்கர் எழுதிய நூலிலிருந்து சில பகுதிகள்..**

புத்தருடைய சீடர்களான பாரத்வாஜ் மற்றும் வாசேத்திரர் ஆகியோர் கடவுள் குறித்த கேள்விகளுக்கு புத்தர் இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

37. அனைத்தையும் வென்ற வரும், தான் வெல்லப்படாதவரும், இருப்பவை அனைத்துக் கும், இருக்கப்போகிற அனைத்துக்கும் தந்தையானவரும், நம் அனைவரையும் படைத்தவரும் ஆன பிரம்மா, நிலையானவர், மாறாதவர், எப்போதும் இருப்பவர். என்றென்றும் இதே நிலையில் இருக்கக் கூடியவர் என்கிறீர்கள் நீங்கள்: அப்படியானால். அந்தப் பிரம்மாவால் படைக்கப்பட்டு இவ்வுலகுக்கு வந்த நாம் மட்டும் ஏன் நிலையற்றவர்களாய், மாறுகிறவர்களாய், மறைகிறவர்களாய், உறுதியற்றவர்களாய், இறந்துபோக விதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம்.?”

38. இவ்வினாவிற்கு வாசேத்தர் பதிலிறுக்கவில்லை.

39. வாசேத்திரரின் அடுத்த வாதம் கடவுளின் எல்லாம் வல்ல தன்மையைப் பற்றியதாயிருந்தது." கடவுள் எல்லாம் வல்லவராயும் அனைத்துப் படைப்புக்கும் காரணத்தராயும் இருந்து விடுவாரேயானால், இதன் காரணமாக மனிதன். தானே எதையும் செய்ய விருப்பற்றவனாகவும், எதையும் செய்ய முடியாத வேண்டிய அவசியமற்றவனாகவும், ஆற்றலைப் பயன்படுத்த அவசியமற்றவனாகவும் ஆகிவிடுவானே? உலக விவகாரங்களின் பங்கேதுமற்ற, கீழ்ப் படிதலுள்ள அற்ப உயிராய் அல்லவா மனிதன் நீடிக்க வேண்டி வரும்? இதுதான் மனிதனின் நிலையெனில், பிரம்மா ஏன் மனிதனைப் படைக்க வேண்டும்?

40.இவ்வினாவிற்கும் வாசேத்தர் பதிலிறுக்கவில்லை.

41."கடவுள் மிகவும் நல்லவர் என்றால், பின் அவரால் படைக்கப்பட்ட மனிதர்கள் ஏன் கொலைகாரர்களாக, திருடராக, தூய்மையற்றவர்களாக, பொய்யர்களாக, இழுக்குடையவர்களாக, தீயுரை புகலும் வீணர்களாக, பிறர்பொருள் கவர்பவர்களாக, தீய எண்ணம் உடையவர்களாக, தீய செயல் செய்பவர்களாக உருவாகிறார்கள்? இதற்கும் ஈஸ்வரன்தானே காரண மாக இருக்க வேண்டும். அனைத்தையும் ஆக்குபவர் எனப்படும் கடவுள் நல்லவராக இருந்தால் இவ்வாறு நடக்க முடியுமா?" என்பது அவருடைய பதில்.

42. அவருடைய அடுத்த வாதம் கடவுள் 'எல்லாம் அறிந்த தன்மையையும், நீதியானவர், கருணைமிக்கவர் என்ற கூற்றையும் பற்றியதாயிருந்தது.

43."நீதிமானாகவும், கருணைமிக்கவனாகவும் உள்ள மேலான படைப்பாளி இருந்தால், ஏன் உலகில் இவ்வளவு அநீதிகள் நிலவுகின்றன?" என்று என்று வினவினார் புத்தர்'' கண்ணுள்ளவரெல்லாம் துயரக்காட்சிகளைக் காண முடியுமே; தன்னால் படைக்கப்பட்டவற்றை ஏன் பிரம்மா சரிப்படுத்தக் கூடாது? எல்லையற்ற ஆற்றல் உடையவர் அவர் என்றால் அவர் கரங்கள் ஏன் அனைத்தையும் நல்லவையாக்க முடியவில்லை? ஏன் அவரால் படைக்கப்பட்டவை பாதிப்புக்கும். துயருக்கும் உள்ளாகின்றன?

44. எல்லாம் வல்ல ஓர் இறைவன் இருந்து, அவர் ஒவ்வொரு உயிருக்குள்ளும் இன்பம் அல்லது துன்பத்தையும், நற்செயல் அல்லது தீச்செயலையும் இட்டு நிரப்புகிறாரென்றால், அந்த இறைவர் பாவங்களால் கறைபட்டவர் என்று பொருள். ஒன்று மனிதன் தன் விருப்பப்படி இயங்கமுடியவில்லை, அல்லது கடவுள் நீதியானவராகவோ, நல்லவராகவோ இல்லை, என்று ஆகும்.’

45. கடவுளின் இருப்பு பற்றிய விவாதமே பயனற்றது என்பது கடவுள் கோட்பாட்டுக்கு எதிராக அவர் வைக்கும் அடுத்த வாதமாகும்.

**சமயத்தின் மய்யப்புள்ளி மனிதனுக்கு கடவுளுக்கும் இடையிலான உறவு பற்றியதாக இருக்க கூடாது. அது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு பற்றியதாகவே இருக்க வேண்டும் என்பதே புத்தரின் கருத்து.**

***46. சமயத்தின் மையப்புள்ளி மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான உறவுபற்றியதாயிருக்கக் கூடாது என்பதே கருத்து. அது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு பற்றியதாகவே இருக்க வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்கும் நோக்கில் ஒருவன் மற்றொருவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கற்பிப்பதே சமயத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.***

47. புத்தர் ஏன் கடவுள் இருப்புக் கோட்பாட்டுக்கு எதிராக இருந்தார் என்பதற்கு மற்றொரு காரணமும் இருந்தது.

48. அவர் மதச் சம்பிரதாயங்கள், சடங்குகள், ஆசாரங்கள் ஆகியவற்றுக்கு எதிராய் இருந்தார். அவைகள் மூடநம்பிக்கை களின் இருப்பிடங்களாக இருந்தமையாலும், மூடநம்பிக்கை புத்த நெறியான எண்வகை நன்மார்க்கத்திற்கு (அஷ்டாங்க மார்க்கம்) மிகவும் அத்தியாவசியமான சமநோக்கிற்கு (சம்மதிட்டி) விரோதமாய் இருப்பதாலும் அவற்றை அவர் எதிர்த்தார்.

49. புத்தர் கடவுள் நம்பிக்கை என்பதை மிகவும் அபாயகரமானதாய்க் கருதினார். ஏனெனில், கடவுள் நம்பிக்கை பூசையிலும், பிரார்த்தனையிலும் நம்பிக்கையை உண்டாக்குகிறது. பூசையிலும், பிரார்த்தனையிலும் நம்பிக்கை புரோகிதர்- பூசாரி நிலையைத் தோற்றுவிக்கிறது. புரோகிதர், பூசாரி, குருமார் ஆகியோர் தீயபுத்திசாலிகளாகி மூடநம்பிக்கைகளை உருவாக்குகிறார்கள். இதன் மூலம் சம நோக்கின் வளர்ச்சி முற்றாக அழிக்கப்படுகிறது.

53. மிக முக்கியமான வினா இதுதான்: கடவுள் ஒன்றை உண்டாக்கினாரா? அல்லது ஒன்றை மற்றொன்றிலிருந்து உண்டாக்கினாரா?

54. வெறுமையிலிருந்து ஒன்று உண்டாக்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ளமுடியாது.

55. கடவுள் எனப்படுபவர் ஏதோ ஒன்றிலிருந்து மற்றவற்றை உண்டாக்கினார் என்றால். அந்த ஏதோ ஒன்று அவருக்கு முன்பே இருந்து வந்திருப்பதாகப் பொருள். அது அவருக்கு முன்பே இருந்து வந்திருக்கிறது என்றால் அதைப் படைத்தவர் அவரில்லை என்றாகிறது.

56. கடவுளுக்கு முன்னமே, ஏதோவொன்று வேறெதனில் இருந்தோ யாராலோ படைக்கப்பட்டுள்ளது என்றால், பிறகு எல்லாவற்றையும் படைத்தவர் என்றோ மூலகாரணர் என்றோ கடவுளைக் கூற முடியாது.

57. கடவுள் நம்பிக்கைக்கு எதிரான இந்த வாதம் புத்தருடைய மறுக்க முடியாத இறுதி வாதமாகும்.

**உதவிய நூல்கள்: அருணன் எழுதிய ‘கடவுளின் கதை’ பாகம்-1, அம்பேத்கர் எழுதிய ‘புத்தமும் அவர் தம்மமும்’ தமிழ் மொழிபெயர்ப்பு டாக்டர் வீ.சித்தார்த்தா எனும் பெரியார்தாசன்.**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

### சேலம் மாவட்டக் கழகம் தொடர் பரப்புரை

# ஜாதிப் பெருமை பேசாதீர்!

**ஜாதிப் பெருமை அல்ல அது அவமானம் ஜாதிப் பெருமை பேசாதீர் அது மீண்டும் நம்மை அடிமையாக்கிவிடும் என்றும் மக்களிடம் திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடு முழுதும் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை செய்து வருகிறது.**

**உலகம் முழுதும் மனிதர்கள் பிறக்கிறார்கள் இந்த நாட்டில் மட்டும் தான் மனிதப் பிறவியோடு ஜாதி அடையாளமும் சேர்ந்து பிறக்கிறது. அந்த ஜாதியே சமூகத்தைப் பாகுப்படுத்துகிறது. ஜாதி அமைப்புக்குள் நாம் மூழ்கிக் கிடந்தால் பார்ப்பனியத்தின் அடிமை வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறோம் என்று அதன் பொருள். கடந்த தலைமுறைகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஜாதியைப் படிக்க விடவில்லை. ஜாதித் தொழிலை கட்டாயப்படுத்தினார்கள். இதிலிருந்து மீண்டு படித்து, ஜாதித் தொழிலில் இருந்து விடைபெற்ற பிறகு நாம் ஜாதிப் பெருமையை பேசிக் கொண்டிருக்கலாமா?**

**வெவ்வேறு ஜாதிகளுக்கிடையே மனம் விரும்பி திருமணம் செய்தால் அதை தடுக்கலாமா? கழகத் தோழர்கள் அடுக்கடுக்கான கேள்வியை மக்கள் மன்றத்தில் எழுப்பி வருகிறார்கள்.**

சேலம் இளைஞர் அணியின் சார்பில் "மனிதம் நமது அடையாளம்" "ஜாதி நமக்கு அவமானம்" ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான சமத்துவப் பரப்புரை தெருமுனைக் கூட்டங்கள் 3 நாட்கள் நடைபெற்றன.

**முதல் நாள்:** 23.08.2025 நங்கவள்ளி பேருந்து நிலையம், ஜலகண்டாபுரம் பேருந்து நிலையம், எடப்பாடி பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. பிரபாகரன் (மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்), சிவ சண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) தலைமை வகித்தார்.
சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), முன்னிலை வகித்தனர்.

கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) வரவேற்புரை யாற்றினார். கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்), உமாசங்கர் (வனவாசி நகரச் செயலாளர்) ஜாதி ஒழிப்பு பாடல்கள் பாடினார்கள்.



நங்கவள்ளி அன்பு (சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர்), நிர்மல் குமார் (கோவை மாநகரத் தலைவர்), கிருத்திகா (திமுக இளம் பேச்சாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினர். நங்கவள்ளி தமிழ்ச்செல்வி, கஸ்தூரி நன்றி தெரிவித்தார்.

அன்பு (சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர்), மேட்டூர் முத்துராஜ், பன்னீர்செல்லவம் (வனவாசி நகரச் பொருளாளர்), நிலவன், கி.பிரபாகரன், கஸ்தூரி, கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்), கொங்கணாபுரம் கோகுல், மேட்டூர் மணி, நித்திஷ் வெள்ளரி வெள்ளி, புவனேஷ் ராஜவேலு ஆகியோர் கலந்து கொண்டனர். மதிய உணவு காவல்துறை அதிகாரி வெங்கடேஷ் அவர்கள் வழங்கினார்.

**இரண்டாம் நாள்:** 24.08.2025 தாரமங்கலம் பேருந்து நிலையம், சின்னப்பம்பட்டி பேருந்து நிலையம், இளம்பிள்ளை பேருந்து நிலையம் ஆகிய இடங்கிளில் நடைபெற்றது.

தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) தலைமை வகித்தார். தேவ பிரகாஷ் (சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர்), முத்துமாணிக்கம் (சேலம் மாவட்ட அமைப்பாளர்) முன்னிலை வகித்தனர்.
உமாசங்கர் (வனவாசி நகரச் செயலாளர்), சங்ககிரி செந்தில் குமார் ஜாதி ஒழிப்புப் பாடல்கள் பாடினார்கள் தொடங்கியது.

நிர்மல் குமார் (கோவை மாநகரத் தலைவர்), வழக்கறிஞர் சரவண பரத் (திமுக), தேவ பிரகாஷ் (சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர்), நங்கவள்ளி நித்யா, ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

சிவ சண்முகம் (மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), சங்ககிரி செந்தில், சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), இளம்பிள்ளை ரவி, சிந்தாமணியூர் முருகேசன், கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்), நங்கவள்ளி நித்யா, கொங்கணாபுரம் கோகுல், பிரகதீஷ், இளம்பிள்ளை தமிழ்மணி, சிந்தாமணியூர் முருகேசன், மேச்சேரி சபரி, பேராண்டிக் கடை சேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். மேட்டூர் முத்துராஜ், கொங்கணாபுரம் கோகுல் ஆகியோர் நன்றி தெரிவித்தனர். தோழர்களுக்கு மதிய உணவு இளம்பிள்ளை தமிழ்மணி, குட்டி-சத்தியா ஆகியோர் வழங்கினார்கள்.

**மூன்றாம் நாள்:** 25.08.2025: காடையாம்பட்டி அரசு மருத்துவ மனை, டேனிஷ்பேட்டையில் நடைபெற்றது. கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), ஏற்காடு பெருமாள் (சேலம் மாவட்ட அமைப்பாளர்) தலைமை வகித்தனர். தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) முன்னிலை வகித்தார்.

கே.ஆர்.தோப்பூர் கண்ணன், நங்கவள்ளி அன்பு (சேலம் மாவட்ட அமைப்பாளர் ), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்), ஏற்காடு பெருமாள்(சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்), தேவ பிரகாஷ் (சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர்) ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். உமா சங்கர் (வனவாசி நகரச் செயலாளர்) நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் கவியரசு, கி.பிரபாகரன், மேட்டூர் முத்துராஜ், பேராண்டிக் கடை சேகர், ஜலகண்டாபுரம் ஜெயந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் கவியரசு, கி.பிரபாகரன், மேட்டூர் முத்துராஜ், ஜலகண்டாபுரம் ஜெயந்தி, இரண்யா, ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர்களுக்கு மதிய உணவு கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்), ஏற்காடு பெருமாள் (சேலம் மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் வழங்கினார்கள். இரவு உணவு இரண்யா அவர்கள் வழங்கினார்.

# சமத்துவபுரமாகிய நரசிம்மன்நகர்

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை 'முரசொலியில்' ர.பிரகாசு எழுதி வருகிறார். கடந்த இதழின் தொடர்ச்சி இது.**

ஆனைமலை ஆற்றங்கரையை அடுத்து, நரசிம்மனுக்கு சொந்தமான தென்னந்தோப்பு ஒன்று இருந்தது. மக்கள் போக்குவரத்து நிறைந்த பகுதி. அங்குள்ள நெடுஞ்சாலையை யொட்டி திராவிடர் கழகக் கட்டடமும் அதில் பகுத்தறிவுப் படிப்பகமும் அமைக்கப் பட்டிருந்தன. அங்குள்ள நாயக்கர் தெருவில்தான் நரசிம்மனின் வீடு இருந்தது. அந்த வீட்டிற்குள் பெரியாரின் வேன் வந்து செல்வதற்காகவே நுழைவாயிலில் தனிவழி அமைத்திருந்தார். வீட்டின் புல்தரையில் பெரியாருடன் அமர்ந்து பேசிய வரலாறும் உண்டு. இத்தகைய பேச்சுக்களின் ஊடாக, நரசிம்மனுக்கு மூன்று முக்கிய ஆலோசனைகளை வழங்கியிருந்தார் பெரியார்.

**1)** தன்னிடம் இருக்கும் நிலத்திலோ அல்லது புதிதாக வாங்கியோ தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றாக இருக்கும் வகையில் பகிர்ந்தளிக்க வேண்டும்.
**2)** தனது செல்வாக்கைப் பயன்படுத்தி பேரூராட்சியில் அரசு நிலத்தில் சகல தரப்பு மக்களையும் உள்ளடக்கிய 'சமத்துவக் குடியிருப்பு' ஒன்றை அமைக்க வேண்டும்.
**3)** தாழ்த்தப்பட்டவர் ஒரு வரை பேரூராட்சித் தலைவர் ஆக்க முயற்சிக்க வேண்டும்.

கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மூன்று ஆலோசனைகளையும் நிறைவேற்றினார் நரசிம்மன். குறிப்பாக, ஆனைமலையில் பைமாசி நஞ்சப்ப கவுண்டர் என்பவருக்குச் சொந்தமான காலியிடம் ஒன்று இருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சிலர் அங்கு குடிசை அமைத்து தங்கியிருந்தனர். எதிர்பாராத விதமாக நிகழ்ந்த தீ விபத்து ஒன்றில், குடிசைகள் தீக்கிரையாகி விட்டன. அதனால், அந்த இடத்தை விற்றுவிட முடிவெடுத்தார் பைமாசி நஞ்சப்ப கவுண்டர். பெரியாரின் அறிவுரையை நிறைவேற்று வதற்கான வாய்ப்பாக இதை எடுத்துக்கொண்ட நரசிம்மன், அந்த இடத்தை தானே வாங்கி, தீ விபத்தில் வீட்டை இழந்தவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கும் பகிர்ந் தளித்து, தமிழ்நாட்டின் முதல் சமத்துவபுரத்தை மலரச் செய்தார்.

அடுத்து, காந்தியவாதியாக இருந்த காலத்திலேயே தன்னு டன் இணைந்து பணியாற்றிய ஏ.எம்.மாசாணி என்பவரை, பொதுத்தொகுதி யில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து, பேரூராட்சி மன்றத் தலைவராக்கினார். அந்த ஏ.எம்.மாசாணி மற்றும் மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சியினரை இணைத்துப் போராடி, புதிய குடியிருப்புப் பகுதி ஒன்றை உருவாக்கினார்.

அரசை வைத்தே அனைத்து சமூக மக்களுக்கும் அந்தக் குடியிருப்பில் நிலத்தைப் பகிர்ந்தளித்தார். அவருடைய உழைப்பைப் போற்றும் விதமாக, மக்கள் அந்தப் பகுதிக்கு 'நரசிம்மன் நகர்' என்றே பெயர் சூட்டினர்.

இத்தகைய கொள்கை உறுதிமிக்க சாதி ஒழிப்புப் போராளி நரசிம்மன் அவர்கள் 1967-ஆம் ஆண்டிலேயே மறைந்துவிட்டார்.

**"கழகத்தின் கண்போன்ற தோழர் நரசிம்மன் அவர்களை இயக்கத்தின் முக்கிய பொறுப்பில் எனக்குப் பின்னால் அமர வைக்க நினைத்திருந்தேன். ஆனால், அவர் என்னை முந்திக்கொண்டார்"** என விடுதலையில் இரங்கல் செய்தி எழுதினார் பெரியார். ஆனால், அவர் எழுப்பிச் சென்ற நரசிம்மபுரம் இன்றும் ஜாதி, சமய வேறுபாடுகளற்ற சமத்துவபுரமாக அவரை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது.

# ஜாதிவெறி மிரட்டல் காவல்துறையில் கோவை மாவட்டக் கழகம் மனு!

கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் நிர்மல் குமார் (மாநகரத் தலைவர்) தலைமையில் காவல்துறையிடம் மனு கொடுக்கப்பட்டது.

கோபி, சுதாகர் இருவரும் பரிதாபங்கள் என்கிற வலையொலி சேனல் மூலம் விழிப்புணர்வு வீடியோக்களை தொடர்ந்து பதிவு செய்து வருகிறார்கள். ஆணவக் கொலைகளுக்கு காரணமாக உள்ளவற்றை விளக்கி அதனால் ஏற்படும் பாதிப்புகளை உணர்த்தியும் கல்வி சார்ந்து முன்னேறுவோம் ஒற்றுமையாக இருப்போம் என்பதை வலியுறுத்தியும் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளனர்.

இந்த வீடியோ வெளியான நிலையில் திரைப்படத் தயாரிப்பாளர் சவுத்ரி தேவர் என்பவர் கோபி சுதாகர் இருவரையும் பகிரங்கமாக மிரட்டியுள்ளார். அதுமட்டுமன்றி அண்மையில நடந்த சுர்ஜித் ஆணவப் படுகொலையை நியாயப்படுத்தி ஜாதி வெறியை தூண்டியுள்ளார். இவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கழகத் தோழர்கள் நவீன் (தமிழ்நாடு மாணவர் கழகம் கோவை) வழக்கறிஞர்கள் பாபு, முத்துமாரி, சண்முகநாதன் (பெரியார் மாணவர் கழகம்), வழக்கறிஞர் நரேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 04, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran